தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 5, திங்கட்கிழமை.

மாசி 22, ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்."

மனத் தெளிவுடன் ஆராய்ந்து கண்ட ஒரு செயலினைச் சோர்வு கொள்ளாமலும், காலம் கடத்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.

1. இரங்கல் குறிப்புகள்.

பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. சி. சின்ன வெள்ளையன் அவர்கள் 20-2-1984 ஆம் தேதியன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திருமதி பூபதிராஜு பங்காரம்மா அவர்கள் 24-2-1984 ஆம் தேதியன்றும் மறைந்ததமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சின்ன வெள்ளையன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் (ஆதிவாசிகளுக்கான) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். 1960 ஆம் ஆண்டிலிருந்து 1965 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1970 ஆம் ஆண்டு முதல் பத்தாண்டு காலம் நடுகோம்பை ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

திருமதி பூபதிராஜு பங்காரம்மா அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள பீமாவரம் பொது தொகுதியில் இருந்து, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

[1984 மார்ச் 5

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருந்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*வேதாரண்யம் துணைக் கருவூலத்திற்கான புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

155—(*வினா எண். 20343)—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் துணைக் கருவூலத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தற்போது வேதாரண்யம் துணைக் கருவூலம் வேதாரண்யம் தாலுகா அலுவலகக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் நடை பெறுகிறது. இக்கட்டிடம் வேதாரண்யம் துணைக் கருவூலம் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது. இக்கட்டிடத்தின் பழமையான பகுதி ரூ. 21,000 செலவில் பழுது பார்க்கப்பட்டு முடிக்கும் நிலையில் உள்ளது.